27.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## விவசாயிகளுக்கான தொலைக்காட்சி: பிரதமர் மோடி துவக்கி வைத்தார் (புகைப்படங்கள்)




மத்திய அரசின் தூர்தர்ஷன் நிறுவனம் சார்பில் 'டி.டி. கிஸான்' என்ற பெயரில் விவசாயிகளுக்கான பிரத்யேக தொலைக்காட்சி அலைவரிசையின் ஒளிபரப்பு சேவையை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை (மே 26) தொடங்கி வைத்தார்.அனைத்து மாநிலங்களிலும் விவசாயிகள் உள்ளனர். ஆதலால், கேபிள் சட்டத்தின் கீழ் 'டி.டி. கிஸான்' தொலைக்காட்சியை கட்டாயமாக அனைத்து கேபிள் நிறுவனங்களும், டி.டி.எச். நிறுவனமும் ஒளிபரப்ப வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.தூர்தர்ஷன் சார்பில் தொடங்கப்பட்டுள்ள இந்த தொலைக்காட்சி சேவை டி.டி. கிஸான் என்றும் பெயரில் 24 மணி நேர ஒளிபரப்பு சேவையாக இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பயன் தரும் வகையில் நிகழ்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேலூரில் ஆலங்கட்டி மழை**




வேலூர் மாநகரில் செவ்வாய்க்கிழமை மாலை பல இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தது. பலத்த காற்றுடன் மழை பெய்ததால் நகரில் உள்ள பேனர்கள் பெரும்பாலானவை சரிந்து விழுந்தன. செவ்வாய்க்கிழமை காலை முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. பிற்பகலில் அனல் காற்று வீசியது. இந்நிலையில் மாலை 4.30 மணியளவில் வேலூர், காட்பாடி உள்ளிட்ட இடங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்யத் தொடங்கியது. சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. தாழ்வான தெருக்களில் உள்ள வீடுகளில் தண்ணீர் புகுந்தது. காட்பாடி, வேலூர் உள்ளிட்ட இடங்களில் பல இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்ததை அடுத்து சிறுவர்கள் அவற்றை சேகரித்து மழையில் விளையாடத் தொடங்கினர்.

**வேலூரில் 104 டிகிரி வெயில்: ஏழு நகரங்களில் வெயில் சதம்**



தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை அதிகபட்சமாக வேலூரில் 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவாகியுள்ளது. மேலும் சென்னை உள்ளிட்ட ஏழு நகரங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியுள்ளது.

தமிழகத்தில் நிகழாண்டு கோடையில் ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை ஆகிய இரண்டு நாள்களும் அதிகபட்சமாக 108 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெப்பநிலை பதிவானது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை வெயிலின் அளவு சற்று குறைந்தது.

வேலூரில் அதிகபட்சமாக 104 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியது. மேலும் சென்னை உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் 100 டிகிரிக்கு மேல் வெப்பம் நிலவியது.சென்னை மாநகரில் காலை முதலே வெயிலின் தீவிரம் குறைந்து காணப்பட்டது. வானம் மேகமூட்டத்துடன் இருந்தபோதிலும், அனல் காற்று, புழுக்கம் குறையவில்லை. இதனிடையே, வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் வட மாவட்டங்களில் புதன்கிழமை சூறைக்காற்று, இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை நகரைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களிள் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

| | | |
|---|---|---|
| வேலூர் | | 104 |
| சென்னை | மீனம்பாக்கம் | 103 |
| சென்னை | நுங்கம்பாக்கம் | 103 |
| திருச்சி | | 103 |
| பரங்கிப்பேட்டை, | கடலூர் | 102 |
| பாளையங்கோட்டை, | மதுரை | 102 |
| கரூர் | பரமத்தி | 101 |

நாகை- 99, புதுச்சேரி 103

**மழையால் பாதிப்பு: தக்காளி, வெங்காயம் விலை உயர்வு**

கோடை மழையால் உற்பத்தி குறைந்து, தக்காளி மற்றும் வெங்காயம் விலைகள் உயர்ந்துள்ளன. கடந்த சில நாள்களுக்கு முன்பு கிலோ ரூ. 5 வரை விலை மலிவாக விற்ற தக்காளி திடீரென ரூ.40 வரை உயர்ந்துள்ளது. கிலோ ரூ.15 ஆக இருந்த சின்ன வெங்காயத்தின் விலையும் ரூ.30 வரை உயர்ந்துள்ளது. செவ்வாய்க்கிழமையன்று மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த காய்கறிச் சந்தையில் 15 கிலோ கொண்ட தக்காளி பெட்டி விலை ரூ.400 ஆக இருந்தது. சில்லறை விலையில் தக்காளி கிலோ ரூ.30 முதல் 40 வரை விற்பனை ஆனது. இந்த விலை உயர்வு குறித்து மாட்டுத்தாவணி காய்கறிச் சந்தையின் தக்காளி மொத்த வியாபாரி சேகர் கூறியது: கடந்த சில நாள்களுக்கு முன் பெய்த கோடை மழையால் ஆண்டிபட்டி, உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளில் தக்காளி சாகுபடி அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக பகுதிகளில் இருந்து தக்காளி வரத்து இல்லை. தற்போது ஆந்திராவில் இருந்து மட்டுமே தக்காளி பெறப்படுகிறது. தக்காளிக்கு வியாபாரிகள் ஒட்டுமொத்தமாக ஆந்திராவை நம்பியிருப்பதால் ஆந்திராவிலும் தக்காளி விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் தற்போது

மீண்டும் தக்காளி பயிரிட்டுள்ளனர். அதில் மகசூல் வருவதற்கு இன்னும் 45 நாள்கள் ஆகும். அதுவரை தக்காளி விலை உயர்வு நீடிக்கக்கூடும் என்றார். தக்காளி போன்று சிறிய வெங்காயம் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் விலை ரூ.25 ஆக உயர்ந்துள்ளது. சில இடங்களில் சின்ன வெங்காயம் ரூ.40 வரையில் விற்பனை செய்யப்படுகிறது. பெரிய வெங்காயம் சிறிது விலை உயர்ந்து ரூ.20 ஆக இருந்தது. மழையால் உற்பத்தி பாதிக்கப்பட்டு வரத்து குறைந்ததே இதற்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வேளாண்மை வளர்ச்சி பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

தேனி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வேளாண்மை வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் ந.வெங்கடாசலம் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

குச்சனூர் பகுதியில் நெல் தரிசில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயறு வகை பயிர்கள், ஆனைமலையன்பட்டியில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பண்ணைய செயல் விளக்கத் திடல், நாகையகவுண்டன்ப்பட்டியில் தோட்டக் கலைத் துறை மூலம் மானியம் பெற்று வளர்க்கப்பட்டு வரும் திராட்சை கொடிகள், கம்பம் ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகத்தில் செயல்பட்டு வரும் வாழை குளிர் பதன கிடங்கு, சீலையம்பட்டி அருகே ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை, கோட்டூர் அருகே விவசாய நிலத்தில் அரசு மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மோட்டார் பம்பு ஆகியவற்றை ஆட்சியர் ஆய்வு செய்தார். அவருடன், வேளாண்மை இணை இயக்குநர் வெங்கடசுப்பிரமணியன், தோட்டக்கலைத் துணை இயக்குநர் சின்ராஜ், வேளாண்மை விற்பனைத் துறைத் துணை இயக்குநர் செ.முத்தையா, தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் சுரேஷ்ஸ்ரீராம், செந்தில்குமார், ஆட்சியரின் நேர்முக

உதவியாளர்(வேளாண்மை) எஸ்.ரங்கநாதன், நீர்வடிப்பகுதி முகமை வேளாண்மைத் துணை இயக்குநர் அழகுநாகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விருதுநகரில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு மாவட்ட தலைவர் ராமதாஸ் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் சீனிவாசன் வேலை அறிக்கை சமர்ப்பித்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் தி.ராமசாமி அரசியல் நிலவரம் குறித்து விளக்கவுரையாற்றினார். கூட்டத்தில், பிளவக்கல் அணையிலிருந்து பாசனத்திற்கு உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும். வீட்டுமனை மற்றும் நிலமாற்றம் தொடர்பான பட்டாக்களை கால தாமதமின்றி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர்கள் பால்சாமி, குருசாமி, அய்யனார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## துல்லிய பண்ணைத்திட்டத்தில் 11,500 விவசாயிகளுக்கு ரூ.14 கோடியில் உதவி

துல்லிய பண்ணையத்திட்டத்தில் இதுவரை 11,500 விவசாயிகள் ரூ.14 கோடியில் மதிப்பில் பயனடைந்துள்ளனர்.கரூர் மாவட்டம் தாந்தோணி ஒன்றியம் உப்பிடமங்கலம் பேரூராட்சியில் உள்ள லிங்கத்தூர் பகுதியில் தோட்டக்கலைத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை ஆய்வு செய்ய திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி தலைமையில் செய்தியாளர்கள் பயணம் மேற்கொள்ளப்பட்டது. லிங்கத்தூரில் முன்னோடி விவசாயி பழனியப்பனின் வயலில் உயர் தொழில் நுட்ப உற்பத்தி பெருக்கும் திட்டத்தின்கீழ் 4 ஏக்கரில் பந்தல் காய்கறி சாகுபடி திட்டத்தில் முழு

மானியத்தில் சொட்டுநீர் பாசன முறையில் புடலை, பீர்க்கங்காய், பாகற்காய், அவரை போன்ற கொடி வகை காய்கறிகள் பயிரிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டு அவற்றின் பயன்கள்

குறித்து விவசாயியிடம் கேட்டறிந்தார். அப்போது விவசாயி கூறுகையில், பந்தலில் காய்கறி பயிரிடுவதால் சேதாரம் குறைவு. பிஞ்சுகளும் 100சதவீதம் காய்கறியாகி பலன் தருவதால் இழப்புக்கு இடமில்லை. சொட்டுநீர் பாசனத்தில் குறைந்த தண்ணீரில் அதிகளவு சாகுபடி செய்வதால் செலவும் குறைவு, லாபம் அதிகம் என்றார்.

தொடர்ந்து லிங்கத்தூரில் முன்னோடி விவசாயி ராமசாமி விளைநிலத்தில் 10 ஏக்கரில் நுண்ணுயிர் பாசன இயக்கத்திட்டத்தில் மாவகை கன்றுகள் நடவு செய்திருப்பதை பார்வையிட்டு சொட்டுநீர் பாசனத்தில் பணிகள் மேற்கொள்வதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தோட்டக்கலைத்துறை மூலம் நான்காண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ள

திட்டங்கள் குறித்து செய்தியாளர்களிடம் ஆட்சியர் கூறுகையில், மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலைத்துறை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் நடவுச் செடிகள் பயிரிட ரூ.116.8 லட்சம் மதிப்பில் 50 சதவீத மானியத்தில் 8,255 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

துல்லிய பண்ணையத் திட்டத்தின் கீழ் 250 ஏக்டேரில் ரூ.45.9 லட்சத்தில் உயர் விளைச்சல் தரும் காய்கறி, வாழை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 316 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மானாவரி பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம் அமைக்க ரூ.106.37 லட்சம் செலவில் 365 எக்டேர் நிலம்

சீர் செய்து ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு காய்கறி சாகுபடி செய்யும் வகையில் விதைகள், பழக்கன்றுகள், இடுபொருட்கள்

வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 398 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தேசிய நுண்ணிய பாசன இயக்கம் மூலம் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மற்றும் 75 சதவீத மானியத்தில் ரூ.748.5 லட்சத்தில் 1871.28 எக்டேரில் 1,430 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய மூலிகை பயிர்கள் இயக்கத்தின் மூலம் ரூ.184 லட்சத்தில் மருந்து கூர்க்கன் மற்றும் கணவலிக்கிழங்கு சாகுபடிக்கென மானியம் பெறப்பட்டு முழுத்தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத்திட்டத்தில் 120 மகளிர் குழு பண்ணைய முறைத்திட்டத்தில் ரூ.16.12 லட்சத்தில் விவசாய பணிகளை செய்து வருகிறார்கள். ரூ.65.90 லட்சத்தில் உயர்விளைச்சல் காய்கறி சாகுபடி மற்றும் வீரிய ஒட்டு காய்கறி சாகுபடி திட்ட மானியம் 1,000 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆய்வின்போது தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் வளர்மதி, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் சொர்ணமாணிக்கம், தோட்டக்கலைத்துறை அலுவலர் பேபி

உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 71.22 அடி**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 71.22 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,393 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை

**மே 29, 30 ல் குடற்புழு நீக்க முகாம்**

நாகப்பட்டினத்தில் மே 29, 30-ந்தேதிகளில் கறவைப்பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பாிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி கூறியிருப்பது: நாகப்பட்டினம் மாவட்டத்தில் விலையில்லா கறவைப்பசு வழங்கும் திட்டத்தின்கீழ் 2011-12 ல் 650 பயனாளிகளுக்கு 650 கறவைப்பசுக்களும், 2012-13 ல் 650 பயனாளிகளுக்கு 650 கறவைப்பசுக்களும், 2013-14 ல் 650 பயனாளிகளுக்கு 650 கறவைப்பசுக்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2014-15 ல் 650 பயனாளிகளுக்கு 650 கறவைப்பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2011-12 ல் 3161 பயனாளிகளுக்கு 12644 வெள்ளாடுகளும், 2012-13 ல் 5396 பயனாளிகளுக்கு 21584 வெள்ளாடுகளும், 2013-14 ல் 5133 பயனாளிகளுக்கு 20532 வெள்ளாடுகளும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன. 2014-15 ல் 4630 விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவைப்பசுக்கள், வெள்ளாடுகள்,செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள், தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமாிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கறவைப்பசுக்களின் பால் உற்பத்தித்திறனை பெருக்கவும்,

வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் எடையை அதிகாிக்கவும், தமிழகம் முழுவதும் மே 29, மே 30 ந்தேதிகளில் கறவைப்பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பாிசோதனையும், வெள்ளாடுகள்,செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற

உள்ளது. விலையில்லா கறவைப்பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என கூறியுள்ளார்.

**பருத்தி விவசாயிகள் கவனத்துக்கு...**

திருவாரூர் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தொழில்நுட்பங்களை கடைபிடித்து கூடுதல் மகசூல் பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போது மாறி வரும் தட்ப வெப்ப நிலை காரணமாக பருத்தி பயிரில் ஆங்காங்கே பூ உதிர்தல் காணப்படுகிறது. வாடல் நோய் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கீழ்குறிப்பிட்டு ள்ள ஆலோசனைகளை அறிந்து பருத்தி விவசாயிகள் பயன் பெறலாம். பருத்தியில் இலைகளில் சிகப்பு நிறமாக மாறின அறிகுறிகள் தென்பட்டால் இலைவழித் தெ ளிப்பானாக ஏக்கருக்கு 2 கிலோ மக்னீசியம் சல்பேட் மற்றும் 1 கிலோ யூரியா ஆகிய உரங் களை 200 லிட்டாό நீரில் கலந்து கரைசலை காய் பிடிக்கும் தருணத்தில் தெளிக்கவும். நுனி வளாό்ச்சியைக் கட்டுப்படுத்த 75-80 நாட்களில் 15 வது கணுவை விட்டு நுனியை கிள்ளி விடுவதால் (நுனி கிள்ளுதல்) அதிகப்படியான பக்க கிளைகள் உருவாகி காய் பிடிக்கும் தன்மையை அதிகாõக்கின்றது. தற்போது பெய்த மழையினால் பருத்தியில் ஆங்காங்கே வாடல் மற்றும் வோό அழுகல் நோய் தாக்கக் கூடும். இதைக் கட்டுப்படுத்த 1 கிராம் கார்பன்டசிம் 1 லிட்டாό தண்ணீருக்கு என்ற அளவில் கலந்து வேரினை சுற்றி பாதிக்கப்பட்ட செடிகளிலும், அருகிலுள்ள செடிகளிலும் ஊற்ற வேண்டும். சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப் பூச்சி, அசுவிணி, இலைப்பேன் மற்றும் வெளόளை ஈக்க ளின் தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. வெளόளை ஈக்களை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட இலை மற்றும் செடிகளை அழிக்க வேண்டும். இந்த

வெள்ளை ஈக்கள் மாற்று உணவுச் செடிகளான களைகளில் அதிகமாக காணப்படுவதால் களைகளை அகற்றி வயலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பூச்சிகளின் நடமாட்டத்தை மஞ்சள் நிற பசைப் பொறியினை செடிகளுக்கு 1 அடி மேல் வைத்து கவர்ந்திழுத்து அழிக்க வேண்டும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டை 5 சதம் அல்லது வேப்பெண்ணெய் 2-3 மிலி 1 லிட்டர் தண்ணீருக்கு என்றளவில் தெளிக்கலாம். கிடைக்குமிடங்களில், மீன் எண்ணெய் சோப் ஒரு கிலோ 40 லிட்டர் நீரில் கரைத்து ஏக்கருக்கு 10 கிலோ தெளிக்கலாம்.

இளம் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளினால் சேதம் அதிகமாகும் போது இமிடாகுளோ பிரிட் 100 மில்லி அல்லது டிரைய்சோபாஸ் 35 இ.சி 600 முதல் 800 மி.லி இவற்றில் ஏதே னும் ஒன்றை ஏக்கருக்கு பயிரின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு 500-700 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து பயன்பெறலாம்.

## உடுமலை வட்டார பகுதிகளில் கரும்பு விவசாயம் இனிக்கவில்லை! மாற்றுப்பயிர் சாகுபடிக்கு மாறும் விவசாயிகள்



உடுமலை : உடுமலை வட்டாரத்தில், நிலையில்லாத கரும்பு, வெல்லம் விலை குறைவால், விவசாயிகள் கரும்பு சாகுபடியை கைவிட்டு மாற்று பயிர் சாகுபடியில், ஆர்வம் காட்டி வருகின்றனர். உடுமலை பகுதியில்,

பி.ஏ.பி., மற்றும் அமராவதி அணைகள் கட்டப்பட்டு, செயல்பாட்டிற்கு வந்த போது, கரும்பு சாகுபடி, அரசால் ஊக்குவிக்கப்பட்டது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை துவங்கப்பட்டதும், ஆலை பரப்பு நிர்ணயிக்கப்பட்டு, பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டன.இதனால், மடத்துக்குளம், குடிமங்கலம், உடுமலை வட்டாரங்களில், சராசரியாக, 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. தற்போது, குடிமங்கலம் வட்டாரத்தில், கரும்பு சாகுபடி முற்றிலுமாக கைவிடப் பட்டுள்ளது. உடுமலை வட்டாரத்தில், ஏழு குள பாசனப்பகுதிகளில் மட்டும், 4 ஆயிரம் ஏக்கர் வரை, கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.அமராவதி பாசனப்பகுதிகளிலும் கரும்பு சாகுபடியிலிருந்து விவசாயிகள் படிப்படியாக தென்னை உட்பட பிற விவசாயத்துக்கு மாறி வருகின்றனர். இவ்வாறு, ஆண்டுதோறும் சாகுபடி பரப்பு குறைந்து வருவதற்கு, கரும்புக்கு நிலையான விலை கிடைக்காததே, முக்கிய பிரச்னையாக விவசாயிகள் கூறுகின்றனர். குடிமங்கலம் வட்டார கிராமங்களில், பி.ஏ.பி., பாசனம் நான்கு மண்டலமாக விரிவுபடுத்தப்பட்ட பின்னர், போதிய தண்ணீர் கிடைக்காமல், சாகுபடி கைவிடப்பட்டது. ஆனால், பாரம்பரியாக கரும்பு பயிரிடப்படும், அமராவதி மற்றும் ஏழு குள பாசனப்பகுதிகளில், சாகுபடி முற்றிலுமாக காணாமல், போகும் முன் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது விவசாயிகள் கோரிக்கையாக உள்ளது. தற்போதைய நிலவரப்படி கரும்பு டன்னுக்கு, 2,400 முதல் 2,550 ரூபாய் வரை தரத்தின் அடிப்படையில், விலை கிடைத்து வருகிறது. பருவ நிலை மாற்றங்கள், சாகுபடி செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களால், இந்த விலை நிலவரம் நஷ்டத்தை ஏற்படுத்தும் என்று விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். விவசாயிகள் கூறியதாவது: கரும்பு சாகுபடியில், அறுவடை மேற்கொள்ள, 10 மாதங்களுக்கும் மேலாகிறது. ஓராண்டுக்கு ஒரே சாகுபடியே மேற்கொள்ள முடியும். ஆனால், அரசு ஆதார விலையை

கூடுதலாக நிர்ணயிக்காததால், வெளிச்சந்தைகளிலும், விலை குறைகிறது. அதே போல், உர விலை உயர்வு, தொழிலாளர்கள் பற்றாக்குறை, நோய்த்தாக்குதல் ஆகிய பிரச்னைகளால், சாகுபடி செலவு அதிகரிக்கிறது. வெல்லத்தின் விலையும் நிலையாக இருப்பதில்லை. ஆண்டுமுழுவதும் ஒரே சாகுபடி மேற்கொண்டு, நஷ்டத்தை சந்திப்பதை தவிர்க்கும் வகையில், தென்னை மற்றும் இதர காய்கறி சாகுபடிகளுக்கு மாறி வருகிறோம். இவ்வாறு கூறினர். வேளாண்துறை அதிகாரிகள் கூறுகையில், "கரும்பு சாகுபடியில், விளைச்சலை அதிகரிக்க, நீடித்த நிலையான சாகுபடி திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, நடவுக்கு கரணைகளை பயன்படுத்தாமல், குழித்தட்டு முறையில், நாற்று உற்பத்தி செய்து, நடவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது. இந்த புதிய தொழில் நுட்பத்தால், ஏக்கருக்கு, 15 டன் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும்,' என்றனர்.

**உறுமாறும் சிறுதானியங்கள்!**



சிறுதானியங்கள் என்பது கேழ்வரகு, வரகு, பனிவரகு, சாமை, தினை, குதிரைவாலி ஆகிய ஆறு பயிர்களை உள்ளடக்கிய தானிய பிரிவை குறிக்கும். நமது பாரம்பரிய தானியங்களான இவற்றின் சிறப்புகள் சங்க

இலக்கிய நூல்களில் இடம் பெற்றுள்ளன. ""தமிழகத்தில் பரவலாக உற்பத்தி செய்யப்பட்டு, உணவாக பயன்படுத்தப்பட்ட சிறுதானியங்கள், கடந்த இருபது ஆண்டுகளில் பெருமளவு குறைந்து ஒரு சில பகுதிகளில் மட்டும் சாகுபடி செய்யப்படும் பயிர்களாக மாறி விட்டன. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் தானியங்களும் உணவாக உட்கொள்ளப்படுவதில்லை. ஆனால் பெருகி வரும் வாழ்வியல் நோய்களுக்கு நம்முடைய உணவுப்பழக்கமே முக்கிய காரணமாக ஆகி விட்டது. சமீப காலமாக சிறுதானியங்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. அதை சந்தைப்படுத்தும் வாய்ப்பும் பெருகி வருவது ஆரோக்கியமானது," என்கிறார் இயற்கை விவசாயி பாமயன். மதுரை திருமங்கலத்தை சேர்ந்தவர். தனது பண்ணையில் இயற்கை முறையில், ரசாயனம், பூச்சிக்கொல்லி மருந்து இல்லாமல் பயிர்களை செழிப்பாக வளரச் செய்து சாதனை படைத்து வருகிறார். மதுரை மாவட்டம் திருமங்கலம், டி.கல்லுப்பட்டி, கள்ளிக்குடி, வில்லூர் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் சிறுதானிய சாகுபடியில் விவசாயிகள் பலர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் பாமயன் சிறுதானியங்களை நேரடியாக விலைக்கு வாங்கி, அவற்றை பட்டை தீட்டுவதற்கு பதிலாக நன்றாக காயவைத்து, தோல் நீக்கித் தருகிறார். இதற்காக திருமங்கலம் அருகே சோலைப்பட்டியில் தொழிற்சாலையை நிறுவியுள்ளார். இங்கு சிறுதானியங்கள் மட்டுமே சுத்தம் செய்யப்படுகிறது. தரமான, சுத்தமான சிறுதானியங்களை பிரபல முன்னணி நிறுவனங்கள் பாமயனிடம் மொத்தமாக கொள்முதல் செய்கின்றன. சிறுதானியங்களை விவசாயிகளிடம் நேரடியாகவும், மொத்தமாகவும் கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. இடைத்தரகர்களுக்கு கொடுக்கும் கமிஷன் தேவையற்றாதாகி விடுகிறது. தொடர்புக்கு 98420 48317

**-கா.சுப்பிரமணியன், மதுரை.**

## தென்னையில் பென்சில் கூர்முனை குறைபாடும் நிவர்த்தியும்



இந்தியாவில் கேரள மாநிலத்திற்கு அடுத்தப்படியாக தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் 1970 ஆம் ஆண்டுகளில் மிக அரிதாகக் காணப்பட்ட பென்சில் கூர்முனை குறைபாடு சமீபகாலங்களில் குறிப்பாக அதிக அளவில் தென்படுகின்றது. ஆரம்ப நிலையிலேயே இக்குறைப்பாட்டை கட்டுப்படுத்தாவிட்டால் தென்னையின் மகசூல் அதிகமாக பாதிக்கப்படும். அறிகுறிகள் : தென்னை மரத்தின் அடிப்பகுதி அகலமாகவும், மேற்பகுதி குறுகி பென்சில் முனை போன்று காணப்படும். இக்குறைபாடு, பயிர் வினையில் ஏற்படும் மாற்றத்தால் தோன்றுகின்றது. மரத்தில் வேரிலிருந்து நீர் மற்றும் சத்துக்கள் மரத்தின் உச்சிக்கு கடத்துவது பாதிக்கப்பட்டு அறிகுறிகள் தோன்றும். அடி மட்டைகளில் உள்ள இலைகள் மஞ்சளடைந்து, வலுவிழந்து கீழே விழுந்து விடும். நாளடைவில் மட்டைகள் சிறுத்தும், எண்ணிக்கை குறைந்தும் காணப்படும். காய்க்கும் திறன் குறைந்து தேங்காய்களில் பருப்பு சிறுத்து அல்லது முற்றிலும் இல்லாமல் தோன்றும். இக்குறைபாடு அதிகமாகும்போது காய்ப்புத்திறனை முற்றிலும் குறைத்து விடும். காரணங்கள் : நுண்ணூட்டச்சத்துக்களான இரும்பு, துத்தநாகம், போரான்

சத்துக்களின் பற்றாக்குறைகள் காரணமாக இக்குறைபாடு ஏற்படுகின்றது. காய்ந்த மட்டைகள், பாளைகளை அகற்றும் பொழுது பச்சை மட்டைகளையும் சேர்த்து வெட்டுவதால் மரத்தின் ஒளி சேர்க்கைத் திறன் பாதிக்கப்படுவதாலும் இக்குறைபாடு தோன்றும். அதிக வயதான மரங்களில் ஊட்டச்சத்தை கிரகிக்கும் திறன் குறைவதாலும் பாதிப்பு உண்டாகும். மண் கண்டம் குறைந்த நிலங்களில் ஊட்டச்சத்துக்களின் கிடக்கை குறைவாக இருந்தாலும், சதுப்பு நிலங்கள், வடிகால் திறன் குறைவான நிலங்களில் தென்னையை பயிரிடுவதாலும் இக்குறைபாடு தோன்றும்.

மேலாண்மை முறைகள் : நுண்ணூட்டச்சத்துக்களான போராக்ஸ், சிங்க் சல்பேட், மாங்கனீசு சல்பேட், காப்பர் சல்பேட் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலுமாக 225 கிராம் என்ற அளவில் எடுத்து அதனுடன் 10 கிராம் அம்மோனியம் மாலிப்பேட்டைக் கலந்து சுமார் 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து மரத்திலிருந்து 1.5 மீட்டர் சுற்றளவுக்குள் ஊற்ற வேண்டும். இவ்வாறு வருடத்திற்கு இரண்டு முறை ஊற்ற வேண்டும். போதுமான அளவு பசுந்தாள் உரங்கள் அங்கக உரங்களை இடவேண்டும்.

மண் பரிசோதனை செய்து ஊட்டச்சத்து பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்ய வேண்டும். தோப்புகளில் களைகளின்றி பேண வேண்டும். காய்ந்த மட்டைகளை வெட்டும் போது பச்சை மட்டைகளுக்கு பாதிப்பு வராத வகையில் அகற்ற வேண்டும். அதிக வயதான மரங்களை அகற்றி விட்டு புதிய கன்றுகளை நடவு செய்ய வேண்டும்.

**- கொ.பாலகிருஷ்ணன்,**

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,**

**மதுரை.**

**சின்ன சின்ன செய்திகள்**



**வெண்பன்றி வளர்க்கும் பட்டதாரி இளைஞர்** : பலரும் தயங்கும் பன்றி வளர்ப்பு தொழிலை விருப்பமுடன் செய்து பலதடைகளைத் தாண்டி வெற்றி பெற்றுள்ளார். முனுசாமி என்ற பட்டதாரி இளைஞர் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள குப்பண்ணபுரத்தைச் சேர்ந்த பட்டதாரியான இளைஞர் திருப்பூரிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் பன்றி வளர்ப்பினை முதல் முதலில் தொடங்கியுள்ளார். பின் சில காலம் கழித்து அவர் சொந்த ஊரான குப்பண்ணாபுரத்திற்கு வந்து பன்றி வளர்ப்பினை மாற்ற நினைத்து இயலாமல் தற்போது தனது அக்கா மாமாவின் ஊரான விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அருகேயுள்ள தோப்பூர் கிராமத்தில் பன்றி வளர்ப்பினை மீண்டும் தொடங்கி சுமார் 14 லட்சம் முதலீட்டில் ஆண்டிற்கு சுமார் 6 லட்சம் லாபத்துடன் மிகச்சிறப்பாக செய்து வருகிறார். தகவல்: பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை-626 107. அலைபேசி : 04566 - 220 561.

**குரோய்லா கோழி** : நாட்டுக்கோழி போலவே இருக்கும் பல புதய இரகக் கோழிகள் ஆராய்ச்சிகளின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமான கினிராஜா, வனராஜா, கிராமப் பிரியா போன்ற இரகங்கள் தென்னிந்தியாவில் இறைச்சிக்காகவும், முட்டைக்காகவும் விரும்பி வளர்க்கப்படுகின்றன. வட இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய இரகம் தான் "குரோய்லா' கோழிகள். இவை நாட்டு ரகக் கோழிகளை

விட அதிக எடையுடனும், அதிக எண்ணிக்கையில் முட்டை உற்பத்தித் திறனும் பெற்றுள்ளன. இவை சமையலறை மற்றும் உங்கள் கழிவுகளை உண்டு வளரும் தன்மை உடையன. இவை ஆண்டுக்கு 150 முட்டைகள் இடும். ஆண் கோழிகள் 3.5 கிலோ எடையும், பெண் கோழிகள் 2.5 கிலோ எடையும் கொண்டு இருக்கும். இக்கோழிகளின் மரபணுக்கதிர் தன்மையால் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகம் கொண்டுள்ளன. இக்கோழிகள் புறக்கடை வளர்ப்பிற்கு ஏற்றவை என உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது குரோய்லா கோழிகள் தமிழகத்தின் பல மாவட்டங்களில் பிரபலமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. தகவல் : ந. அகிலா, ந.பாரதி, க.விஜயகுமார், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மையம், கரூர்-639 006. **பால் மாடுகளுக்கு முளைப்பாரி தீவனம்** : விவசாயி எச்.ஜெயக்குமார் (சில்லமரத்துப்பட்டி, போடி தாலுகா, தேனி மாவட்டம், அலைபேசி : 98434 85201), மக்காச்சோளத்தை பசுந்தீவனமாக வளர்த்து புதிய முறையில் கறவை மாடுகளுக்கு தீவனமாகக் கொடுத்து சாதனை படைத்துள்ளார். மக்காச்சோள விதைகளை 1 அடி அகலம், 15 அடி நீளம், 3 அங்குலம் உயரம் உள்ள பிளாஸ்டிக் டிரேக்களில் முளைப்பாரியாக வளர்த்து 9 நாட்களில் கறவை மாடுகளுக்கு தீவனமாகக் கொடுக்கிறார். டிரேக்களை அடுக்கி வைக்க நிழல்வலைக் கூடாரம் அமைத்து அதில் 1-5 மீ இடைவெளியில் உள்ளதாக 5-6 அடுக்குகள் கொண்ட மர பீரோக்களை வடிவமைத்து, 1 எச்.பி. மோட்டாரின் மூலம் 1 குழாயின் நுனியில் ஷவர் போன்ற துவாரப் பொருத்தி நீர் தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முளைப்பாரி தீவனம் கொடுக்கும் மாடுகளுக்கு தினசரி 1.5 கிலோ அடர் தீவனத்தை குறைத்துக் கொள்கிறார். மேலும் விபரங்களுக்கு ஜெயக்குமார், சில்லமரத்துப்பட்டி, போடி தாலுகா, தேனி மாவட்டம். அலைபேசி : 98434 85201.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தோட்டக்கலை துறைக்கு ரூ.65 லட்சத்தில் அலுவலகம்

வாலாஜாபாத்: தோட்டக்கலை துறை அலுவலகத்திற்கு, 65 லட்சம் ரூபாய் மதிப்பில், புதிய கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் ரயில்வே சாலையில், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் அலுவலகம், வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த கட்டடத்தில், வாகனங்களை நிறுத்துவதற்கும்; ஆலோசனை கூட்டம் நடத்துவதற்கும் போதிய இடவசதி இல்லை என, கூறப்படுகிறது. இதனால், துணை இயக்குனர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர, மாவட்ட நிர்வாகத்திடம் தோட்டக்கலை துறை அதிகாரிகள் முறையிட்டனர். அதன்படி, பஞ்சுபேட்டை வேளாண் துறை இணை இயக்குனர் அலுவலகம் வளாகத்தில், தோட்டக்கலை துறைக்கு, சொந்தமாக புதிய கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. 65 லட்சம் ரூபாய் மதிப்பில் புதிய கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட உள்ளது என, வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### வேளாண் பொறியியல் துறையில் புதிய திட்டங்கள்? குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கேள்விக்கணை

பொள்ளாச்சி : 'வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் திட்டங்கள் என்ன? புதிய திட்டங்கள் வந்துள்ளதா? இயந்திரங்கள் கிடைக்குமா? என விளக்கமளிக்க வேண்டும்,' என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கேள்வி எழுப்பினர்.

பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் முகாம் நேற்று நடந்தது. சப்-கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே தலைமை வகித்தார். விவசாயிகள் பேசியதாவது : தாளக்கரை ஜமீன் முத்தூரில் உள்ள கல்குவாரியால் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. இந்த குவாரிக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை. எப்போது வெடி வைத்து பாறைகள் வெட்டப்படுகின்றன என தெரியாததால் அச்சத்துடன் வாழும் சூழல் உள்ளது. எனவே இந்த குவாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் திட்டங்கள் என்ன? புதிய திட்டங்கள் வந்துள்ளதா? இயந்திரங்கள் கிடைக்குமா? என விளக்கமளிக்க வேண்டும். இயந்திரங்கள் முறையான நேரத்திற்கு கிடைக்காததால் நெல் அறுவடை பாதிக்கப்பட்டு, விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டது. அரசு நேரடி கொள்முதல் மையம் இல்லாததால், விவசாயிகளுக்கு மேலும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இதற்கு மாற்றாக, கரும்பு சாகுபடி செய்யலாம் என்றால், பன்றித்தொல்லை தாங்க முடிவதில்லை. விவசாயிகள் பிரச்னைகளுக்கு அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆழியாறு ஆற்றில் கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும், மாசுபட்ட கழிவுநீர், படர்ந்துள்ள ஆகாயத்தாமரைகளினால் உப்பாறு காணாமல் போய்விட்டது. ஆற்றில் கழிவு நீர் கலக்கும் பிரச்னைக்கு தீர்வு தான் கிடைக்கவில்லை. கோலார்பட்டி அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டும் எவ்வித அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்படவில்லை. எக்ஸ்ரே இருந்தும் அவை பயன்படுத்த முடிவதில்லை. தாவளம் பகுதியில், நிழற்குடை எப்போது வேண்டுமென்றாலும் விழக்கூடிய அபாய கட்டத்தில் உள்ளது. இதனை மாற்றி அமைக்க கோரிக்கை வைத்தும் நடவடிக்கையில்லை. ஆழியாறு புதிய ஆயக்கட்டில் 42 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

இதில் பாதி நிலங்கள் தற்போது காணாமல் போய் வருகின்றன. எனவே, இது குறித்து புதிய கணக்கெடுப்பு நடத்தி பயன்பாட்டில் உள்ள நிலங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு, தொழிற்சாலைகளாக மாறியுள்ள நிலங்கள் குறித்து கண்டறிய வேண்டும்.ஆயக்கட்டு பாசனத்தில் உள்ள நிலங்களை நீக்கவோ, சேர்க்கவோ கூடாது என அரசாணை உள்ளதால், வழங்கும் தண்ணீராவது முறைப்படுத்தி வழங்கலாம். ரேஷன் கார்டுகள் முறையாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்.எஸ்.எஸ்., என பெயரிடப்பட்டு அரசு பஸ்சில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும். மயில் தொல்லையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நல்லாறு, ஆனைமலையாறு திட்டங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினர். வேளாண் பொறியியல் துறை அதிகாரி கூறுகையில்,' இந்தாண்டு புதிய திட்டங்கள் எதுவும் வரவில்லை. இந்தாண்டு, 15 இடங்களில் தடுப்பணைகள் கட்ட அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மானிய விலையில் கருவிகள் வழங்கும் திட்டம் செப், அக்டோபர் மாதங்களில் தான் தெரியும்," என்றார். சப்-கலெக்டர் பேசுகையில்,"கோலார்பட்டி அரசு மருத்துவமனை தற்போது தான் தரம் உயர்ந்துள்ளது. அதற்கு போதுமான வசதிகள் மேம்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும். மற்ற மனுக்கள் மீது மற்ற துறைகளுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

'தினமலர் செய்தியை' சுட்டிகாட்டிய விவசாயிகள்

விவசாயி குறை தீர் கூட்டத்தில் பேசிய விவசாயி ஒருவர், 'தென்னை வளர்ச்சி வாரியத்தில் தென்னங்கன்றுகள் கேட்டால் பதிவு செய்யுங்கள் என்கின்றனர்; ஆனால், இன்று (நேற்று) 'தினமலர்' நாளிதழில், விற்பனை ஆகாத ஒரு லட்சம் தென்னை நாற்றுகள்; அரசு நிதி வீணாகும் அபாயம்,'

என செய்தி வெளியாகியுள்ளது. எனவே, மற்ற பகுதியில் உள்ள தென்னை நாற்றுகளையாவது வாங்கி எங்களுக்கு வழங்கலாம்,"என விவசாயி தெரிவித்தார். இதற்கு சப்-கலெக்டர்,' நடவடிக்கை எடுக்கப்படும்,' என்றார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

உடுமலை : விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், உடுமலையில் இன்று நடக்கிறது.

உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், உடுமலை, கச்சேரி வீதியில் உள்ள தாலுகா அலுவலக வளாகத்தில், இன்று காலை, 11:00 மணிக்கு நடக்கிறது. கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவித்து பயனடையலாம். ஏற்கனவே நடந்த கூட்டத்தில் கொடுத்த மனுக்களுக்கு தீர்வு மற்றும் பதிலும் இக்கூட்டத்தில் வழங்கப்படும், என, வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளுக்கு பரிசோதனை

சேலம்: சேலம் மாவட்டத்தில், கால்நடைகளுக்கு இனப்பெருக்க பரிசோதனை முகாம் மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடக்கிறது. விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் மூலம் பயன்பெறும் பயனாளிகள், தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு, நன்கு பராமரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. பயனாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாக, 201112, 201213 கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு, தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்ட முகாம் மூலம் வழங்கப்பட்டவற்றின் எடையினை அதிகரிக்கவும், அவற்றின் குடற்புழுக்களை நீக்கம் செய்யவும், மே, 29, மே, 30 ஆகிய இரண்டு நாட்கள் சிறப்பு முகாம்

நடக்கிறது. அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளலாம்.

## வெற்றிலைக்கு தனி நலவாரியம்: பேரவை கூட்டத்தில் தீர்மானம்

ப.வேலூர்: "வெற்றிலைக்கு தனியாக நலவாரியம் அமைத்து, அவற்றை பாதுகாத்திட அரசு திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும்' என, பேரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்கம் சார்பில், 38ம் ஆண்டு பேரவை கூட்டம், ப.வேலூரில் நடந்தது. சங்கத் தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். செயலாளர் வையாபுரி வரவேற்றார். பொருளாளர் நடேசன், வரவுசெலவு அறிக்கை தாக்கல் செய்தார். கூட்டத்தில், ராஜா வாய்க்காலில் தொடர்ந்து தண்ணீர் விடவேண்டும். மராமத்து பணிகள் இருந்தால், முன்கூட்டியே விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். பூச்சி மருந்து தெளிக்கும் தொழிலாளர்களுக்கு, பாதுகாப்பு கவசம் உள்பட அனைத்து உபகரணங்களையும் இலவசமாக அரசு வழங்க வேண்டும். குறைந்த பட்சம் மானிய விலை மூலம் அவற்றை கொடுக்க அரசு ஆவண செய்ய வேண்டும். வெற்றிலையில் அதிக மருத்துவ குணங்கள் உள்ளன. அவற்றை மேம்படுத்த அரசு ஆராய்ச்சிகள் செய்து, அதன் பயனை மக்களுக்கு தெரியும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். சில குறும்பட திரைப்படங்களில், குட்கா, புகையிலை ஆகியவற்றுக்கு வெற்றிலையை சேர்த்து தவறாக சித்தரிக்கப்பட்டு வருகிறது. அதை உடனடியாக தடை செய்ய வேண்டும். வெற்றிலைக்கு தனியாக நலவாரியம் அமைத்து, அவற்றை பாதுகாத்திட அரசு திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். வெற்றிலை விவசாயிகள் நேரடியாக கடன் வசதி பெறும் வகையில், கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு ஆலோசனை வழங்க வேண்டும். நீண்ட கால கோரிக்கையான வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை இப்பகுதியில்

அமைத்து, விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தர்மபுரியில் துரியன் பழம் விற்பனை அமோகம்**

தர்மபுரி: கருத்தரிக்காத பெண்களை, கருத்தரிக்க வைக்கும் மருத்துவம் கொண்ட, துரியன் பழம் விற்பனை, தர்மபுரியில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. நீண்ட நாட்களாக, கருத்தரிக்காத பெண்களை, கருத்தரிக்க வைக்கும், துரியன் பழம், ஊட்டி, கொடைக்கானல் மற்றும் கேரள மாநிலத்தின் சில பகுதிகளில் விளைந்து வருகிறது. துரியன் பழம் சீஸன் தற்போது நடந்து வருகிறது. மலைப்பிரதேசங்களில் கிடைக்கும் இப்பழங்களுக்கு, பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள மக்களும், துரியன் பழங்களை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இதையடுத்து, தர்மபுரியில் உள்ள சில பழக்கடைகள் மற்றும் சாலை ஓரம் தள்ளுவண்டிகளில் பழங்களை விற்பனை செய்யும் சிலர், ஆர்டரின் பெயரில், துரியன் பழங்களை வாங்கி விற்பனை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, பழ வியாபாரி கமல்பாட்ஷா கூறியதாவது: கடந்த, ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக, பதப்படுத்தாத, பேரிச்சம்பழம், அத்தி உள்ளிட்ட மருத்துவம் கொண்ட பழங்கள் உள்ளிட்டவற்றை விற்பனை செய்து வருகிறேன். இரண்டு ஆண்டுகளாக, துரியன் பழங்களை விற்பனை செய்து வருகிறேன். தற்போது, ஒரு கிலோ எடை கொண்ட துரியன் பழம், 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்கள், முன் பணம் கொடுத்து, ஆர்டரின் பேரில், துரியன் பழங்களை வாங்கி செல்கின்றனர். மேலும், அத்தி பழம், பதப்படுத்தாத, மரங்களில் நேரடியாக பறித்து விற்பனை செய்யப்படும் பேரிச்சம்பழம் உள்ளிட்டவற்றை ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**வனத்தை பசுமையாக்க வனத்துறை முயற்சி: இலவச மரக்கன்றுகள் நர்சரியில் உற்பத்தி தீவிரம்**

கோபி: சத்தியமங்கலம் வன கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில், வனத்தை பசுமையாக்கும் முயற்சியாக,முதல்வரின் மரம் நடும் திட்டத்துக்காக, வனத்துறை நர்சரி மூலம் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளது.தமிழகம் முழுவதும் பருவமழை பொய்த்துப் போய், வனப்பகுதியில் கசிவு நீர் குட்டை, காட்டாறு, குளங்கள் வறண்டதால், உணவு, நீருக்கு, வனவிலங்குகள் திண்டாடுகின்றன. வனத்தை பசுமையாக்க, தமிழக அரசு, 200708ல், தனி யார் நிலங்களில், காடு வளர்ப்பு திட்டத்தை அறிவித்தது. இதன் மூலம், தங்கள் நிலங்களில் மரங்களை வளர்த்து, அதன் மூலம் விவசாயிகள் பயன்பெற்று வந்தனர். ஆண்டுதோறும், இத்திட்டத்தில், மாவட்டந்தோறும், ஆறு லட்சம் முதல், 10 லட்சம் வரை மரக்கன்றுகள், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தனியார் காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ், ஈரோடு மண்டலத்தில், 200910ல், 6.52 லட்சம் மரக்கன்றுகள், 201011ல், 8.50 லட்சம் மரக்கன்றுகள், 201112ல் ஈரோடு மாவட்டத்தில், 5.75 லட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. தேக்கு, மலைவேம்பு, தும்புவாகை, ஆளு, அரசு, வேம்பு, ஆயமரம், செண்பகப்பூ, பூவரசன், இலுப்பை, வாதநாரான், தூங்கும் வகை, மே ஃப்ளவர் உள்ளிட்ட மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்தாண்டுக்கு பின், நடப்பாண்டில் போதிய பருவமழை இல்லை. இதனால் வனப்பகுதி முழுக்க, வறட்சியை தழுவியுள்ளது. வனம் மற்றும் வனம்சார்ந்த பகுதியில், வனத்தை செழுமையாக்க, வனத்துறை சார்பில் சத்தியமங்கலம் கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில், இலவச மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது.அதன்படி, டி.என்.பாளையம் வனச்சரகத்துக்கு உட்பட்ட, குண்டேரிப்பள்ளம், கணக்கம்பாளையம், பங்களாபுதூர்,

கொங்கர்பாளையம், விளாங்கோம்பை, கடம்பூர் (கிழக்கு), அருகியம், கூத்தம்பாளையம், மாக்காம்பாளையம், கோவிலூர், குன்றி ஆகிய பகுதியினருக்கு, இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக டி.என்.பாளையம் வனத்துறை அலுவலகத்தில், வேம்பு, நாவல், புங்கன், அலங்கார கொள்ளை, வேங்கை, தூங்கும் வாகை மரம், ஆயமரம் ஆகியவை, பாலிதீன் கவர்களில் வேர்களை ஊன்றி, பாக்கெட் செடியாக தயார் செய்யப்படுகிறது.இதுபற்றி வனத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "முதல்வரின் மரம் நடும் திட்டத்தின் படி, டி.என்.பாளையம் வனசரகத்துக்கு உட்பட்ட பகுதிகளில், மொத்தம், 7,000 கன்றுகள் வழங்கப்பட உள்ளது. கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், யூனியன், பஞ்சாயத்துக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்' என்றார்.

**மக்கா சோளத்தில் அதிக மகசூல்: வேளாண் அதிகாரி யோசனை**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்ட அறிக்கை: மக்கா சோளம் கால்நடை தீவனமாகவும், சமையல் எண்ணெய் எடுப்பதற்காகவும் பயன்படுவதோடு தொழிற்சாலைகளில் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மைதா, சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயரிக்கவும் பயன்படுகிறது. இதில், கோ- 1, கே- 1, கங்கா- 5, கே.எச் -1, 2, 3, கோ.எச்.எம் -5, எம் -900 போன்றவை வீரிய ஒட்டு ரகங்களாகும். ஏக்கருக்கு, ஆறு கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பரவும் பூசன நோயை தடுக்க, ஒரு கிலோ விதைக்கு, நான்கு கிராம் டிரைகோ டெர்மா விரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து, 24 மணிநேரம் வைத்திருந்து, பின்பு விதைக்க வேண்டும்.

இத்துடன் உயிர் உர விதை நேர்த்தியும் செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு, 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடி(அரிசி)கஞ்சியில் கலந்து, அதனுடன் பூசன

விதை நேர்த்தி செய்த விதையை, நிழலில் அரை மணிநேரம் உளர்த்தி பின், பாருக்கு பார், 60 செ.மீ., செடிக்கு செடி, 20 செ.மீ., இடைவெளியில் ஒரு விதை வீதம், நான்கு செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். ஒரு சதுர மீட்டரில், எட்டு செடிகளும், ஒரு ஏக்கரில், 32 ஆயிரத்து, 240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். விதைப்புக்கு முன், ஒரு ஏக்கருக்கு, ஐந்து டன் தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவு உரமிடவேண்டும்.

அத்துடன் நடவு வயலில், ஒரு ஏக்கருக்கு, இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம், இரண்டு கிலோ பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை, 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும், 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். சாகுபடிக்கு மொத்தம் பரிந்துரைக்கப்படும் உர அளவான, 119 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 34 கிலோ பொட்டாஷ், இதில் அடியுரமாக மட்டும், 30 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஸ் இடவேண்டும். விதைத்த, 25ம் நாள்முதல் மேலுரமாக, 60 கிலோ யூரியா, 45ம் நாள், 29 கிலோ யூரியா, 17 கிலோ பொட்டாசும் இடவேண்டும். விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும் போது களைக்கொல்லியான அட்ரசின், 50 சதம் நனையும் தூள், 200 கிராம் அல்லது ஆலாகுளோ, 1.6 லிட்டர் ஏக்கர் என்ற அளவில், 360 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான மூலம் தெளிக்கவேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தாவிட்டால் விதைத்த, 17 -18 நாளில் ஒரு முறையும், 40 முதல், 45வது நாளில் ஒரு முறையும் கைகளை எடுக்கவேண்டும்.ஆரம்பக் கட்டத்தில் குருத்து புழு தாக்குதல் தென்படும் இதனை கட்டுப்படுத்த செடிக்கு, இரண்டு கிராம் வீதம் பியூரிடான் குருனை மருந்தை மணலில் கலந்து செடியின் குருத்தில் விதைத்த , 20 வது நாள் இடவேண்டும். தேவைக்கேற்ப, 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்ய வேண்டும். பூக்கும் தருணத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள

வேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தால், ஒரு ஏக்கரில், 2,500 முதல், 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து, 45 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் பெறலாம். இவ்வாறு தெரிவித்தார்.

**விவசாயிகள் சங்க மாநிலக்குழு கூட்டம்**

போடி: தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக்குழு கூட்டம் மாநில தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடந்தது. விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய பொதுச்செயலாளர் ஹன்னன் மொல்லா தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் சண்முகம், பொருளாளர் நாகப்பன், மாவட்ட செயலாளர் சுருளிநாதன் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் கண்ணன் வரவேற்றார். கூட்டத்தில், நிலம் கையப்படுத்தும் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி மாவட்டம்தோறும் விவசாயிகளிடம் ஒரு லட்சம் கையெழுத்து பெற்று வரும் ஜூன் 30 ல் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் விவசாயிகள் ஊர்வலம் செல்வது என்றும், டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையை திறந்து விட கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பால் உற்பத்தியாளர்களிடமும், ஆரம்ப சங்கங்களிடமிருந்து பால் முழுவதையும் ஆவின் கொள்முதல் செய்திடவும், பால் பவுடர், பால் பொருட்கள் இறக்குமதி செய்வதை தடுக்க அரசு முன்வர வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை பா.ஜ.க. தேசிய செயலாளர் ராஜா பேட்டி**



ராஜா

நிலம் கையகப்படுத்தும் சட்டத்தால் விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று பா.ஜ.க. தேசிய செயலாளர் ராஜா கூறினார். கேள்விக்குறி

மத்திய பா.ஜ.க. அரசின் ஓராண்டு நிறைவையொட்டி நாகையில் மாவட்ட அளவிலான மக்கள் தொடர்பாளர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக பா.ஜ.க. தேசிய செயலாளர் ராஜா நேற்று நாகைக்கு வந்தார். முன்னதாக அவர், நாகை சுற்றுலா மாளிகையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- மத்தியில் ஆளும் மோடி அரசு ஓராண்டை நிறைவு செய்துள்ளது. ஊழல் இல்லாத நிர்வாகத்தினால் ஓராண்டு நிறைவு பெற்று 2-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக ஜனநாயக முற்போக்கு கூட்டணி ஆட்சி புரிந்து, இந்திய நாட்டின் கனிம வளத்தையும், நாட்டின் பாதுகாப்பையும்

கேள்விக்குறியாக்கி விட்டது. நாட்டின் கனிம வளத்தை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரை வார்த்தது. இதில் ஸ்பெக்ட்ரம் ஊழல், நிலக்கரி ஊழல், பணவீக்கம் ஆகியவைகளால் நாடு பின்நோக்கி சென்றதால் மக்கள் காங்கிரஸ் ஆட்சியை தூக்கி எறிந்துள்ளனர். மோடி ஆட்சியில் நிலக்கரி ஏலம் விட்டதில் அரசுக்கு ரூ.2 லட்சம் கோடி லாபம் ஏற்பட்டுள்ளது.

காப்பீட்டு திட்டங்கள் : மேலும், வளரும் நாடுகளான பிரேசில், கனடா, சீனா ஆகிய நாடுகளுக்கு இணையாக வளர்ந்து வருகிறது. இதில் இந்தியா 7.4 சதவீதம் வளர்ச்சி பாதையில் வேகமாக சென்று கொண்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு மட்டுமே இருந்த ஓய்வூதிய திட்டத்தை அனைவருக்கும் மாதந்தோறும் ரூ.ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை ஓய்வூதியம் கிடைக்கும் வகையில் “அடல் பென்சன் யோஜனா“ என்ற திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மோடி அரசில் ஏழை, எளிய மக்களுக்காக வங்கி கணக்கு தொடங்கப்பட்டுள்ளது, குறைந்த பிரிமியத்தில் விபத்து காப்பீடு, ஆயுள் காப்பீடு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பிறப்பு-இறப்பு சான்றிதழ், நகர திட்டம் உள்பட அனைத்தும் இணையதளம் வழியாக வழங்கப்படுகிறது. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தால் விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. மோடி சென்ற ஒவ்வொரு நாட்டிலும் இந்தியாவின் வளர்ச்சிக்கான பல்வேறு ஒப்பந்தங்களை செய்து வருகிறார்.

பேட்டியின்போது மாவட்ட தலைவர் வரதராஜன், செயலாளர் நேதாஜி, கல்வியாளர் குழுவை சேர்ந்த கார்த்திகேயன், மாவட்ட வர்த்தகர் அணி துணை தலைவர் சுந்தரவடிவேலன், நகர தலைவர் செந்தில்நாதன், முன்னாள் எம்.எல்.ஏ. வேதரத்தினம் உள்பட பலர் உடனிருந்தனர்.

## 1,025 மூட்டை மஞ்சள் ரூ.45 லட்சத்துக்கு ஏலம்



நாமகிரிப்பேட்டையில், 1,025 மஞ்சள் மூட்டைகள் ரூ.45 லட்சத்துக்கு ஏலம் போனது. மஞ்சள் ஏலம் : நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே உள்ள நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ். கிளை அலுவலக வளாகத்தில் ராசிபுரம் தாலூகா கூட்டுறவு உற்பத்தி யாளர் மற்றும் விற்பனைச் சங்கம் சார்பில் மஞ்சள் ஏலம் செவ்வாய்க்கிழமை தோறும் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்றும் மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, ஒடுவன் குறிச்சி, புதுப்பட்டி, பேளுக் குறிச்சி, அரியாக்கவுண்டம் பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல இடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மஞ்சளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல ஏலத்தில் சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஒடுவன் குறிச்சி உள்பட பல பகுதிகளைச் சேர்ந்த வியாபாரி கள் கலந்து கொண்டனர். ரூ.45 லட்சத்துக்கு விற்பனை இந்த ஏலத்தில் விரலி ரகம் 750 மூட்டைகளும், உருண்டை ரகம் 250 மூட்டைகளும், பனங்காளி ரகம் 25 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.6,260-க்கும், அதிகபட்சமாக ரூ.8,915-க்கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ.6,191-க்கும், அதிகபட்சமாக ரூ.8,069-க்கும், பனங்காளி ரகம்

குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.5,117-க்கும், அதிகபட்சமாக ரூ.16,700-க்கும் ஏலம் விடப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**துல்லிய பண்ணைய திட்டத்தில் 11,500 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் கலெக்டர் ஜெயந்தி தகவல்**



துல்லிய பண்ணைய திட்டத் தின் மூலம் 11,500 விவசாயிகள் பயன் அடைந்து உள்ளனர் என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

ஆய்வு

கரூர் மாவட்டம், தாந் தோணி ஊராட்சி ஒன்றியம், உப்பிடமங்கலம் பேரூராட்சி, லிங்கத்தூர் பகுதியில் தோட் டக்கலைத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை கலெக்டர் ஜெயந்தி நேரில் சென்று பார்வையிட்டார். அதன்படி தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் மூலம் உயர் தொழில் நுட்ப உற்பத்திப் பெருக்கும் திட்டத்தின் கீழ் 4 ஏக்கர் பரப்பளவில் பந்தல் காய்கறிகள் சாகுபடி திட் டத்தில் முழு மானியத்துடன் சொட்டு நீர் பாசன முறை அமைக்கப்பட்டு புடலை, பாகற்காய், அவரை போன்ற கொடி வகை காய்கறிகள் பயிரிடப்பட்டு பராமரிக்கப் பட்டு வருவதை பார்வையிட் டார். இதே போன்று 10 ஏக்கர் பரப்பளவில் தேசிய நுண்ணீர் பாசன இயக்க திட்டம்

மூலம் மாவகை கன்றுகள் (பங்கனபள்ளி, அல்போன்சா, செந்தூரம்) நடவு செய்து சொட்டு நீர் பாசனத்திட்டத்தில் விவசாய பணிகளை மேற்கொண்டு வரு வதை பார்வையிட்டு, அதன் விவரம் குறித்து கேட்டறிந் தார். அப்போது கலெக்டர் ஜெயந்தி கூறியதாவது:-

வேளாண்மைத்துறையில் புரட்சி செய்யும் வகையில் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி வருகிறது.எனவே விவசாயிகள் தங்கள் விளை நிலங்களுக்கு ஏற்றாற் போல் பயிர் வகைகளை தேர்வு செய்து பயிரிட்டு உற்பத்தித்திறனை 2 மடங்கு அதிகரிக்க செய்ய வேண்டும். இதே போன்று தோட்டக்கலைத்துறையின் ஆலோசனையோடு அரசு கொள்முதல் விற்பனை நிலை யங்களிலேயே விளை பொருட் களை விற்பனை செய்து அதிகளவு லாபம் பெற்று பயன் பெற வேண் டும். கரூர் மாவட்டத்தில் ஒருங் கிணைந்த தோட்டக் கலைத்துறை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் நடவுச்செடிகள் பயிரிட ரூ.1 கோடியே 16 லட் சத்து 89 ஆயிரம் மதிப்பில் 50 சதவிகித மானியத்தில் 8,255 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பொருளாதார முன்னேற்றம் : இதே போன்று துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ் 250 எக்டேர் பரப்பளவில் ரூ.45 லட்சத்து 99 ஆயிரம் மதிப்பில் உயர் விளைச்சல் தரும் காய்கறி, வாழை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 316 விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். இதே போன்று மானா வாரி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம் அமைக்க ரூ.1 கோடியே 6 லட்சம் செலவில் 365 எக்டேர் நிலம் சீர் செய்து ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு உள்ளது. அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 120 மகளிர் குழுவினர் பண்ணைய முறைத்திட்டத்தில் ரூ.16 லட்சம் மதிப்பில் விவசாய பணிகளை மேற்கொண்டு பயன் பெற்று வருகிறார்கள். அதன்படி துல்லிய

பண்ணைய திட்டத்தின் மூலம் ரூ.14 கோடியில் 11 ஆயிரத்து 500 விவசாயிகள் பயன் அடைந்து வருகிறார்கள். எனவே தமிழக அரசு வேளாண்மைத் துறைக்காக வழங்கி வரும் பல்வேறு திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரித்து பொருளாதார முன்னேற்றம் பெற வேண்டும். இவ்வாறு கூறினார். இந்த ஆய்வில் தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் வளர்மதி, உதவி இயக்குநர்¢ சொர்ணமாணிக்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தர்மபுரி அருகே மீட்கப்பட்ட மான வன உயிரின பூங்காவில் ஒப்படைக்க நடவடிக்கை**



தர்மபுரி அருகே உள்ள களப்பம் பாடி காப்புக் காடு பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வழி தவறி வந்த ஒரு மான்குட்டியை வனத்துறை யினர் மீட்டனர். . அந்த மான்குட்டிக்கு வெள்ளாட்டு பால் மற்றும் புட்டிப்பால் கொடுத்து வளர்க்கப் பட்டது. இதைத் தொடர்ந்து இலைகள் தழை களை உணவாக கொடுத்து இந்தமான்குட்டி வளர்க் கப்பட்டு வருகிறது. இதை வன உயிரின பூங்கா வில் ஒப்படைக்கவும் நடவடிக்கை மேற் கொள் ளப்பட்டு வருவதாக வனத்துறையினர் தெரி வித்தனர்.

**தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தும் திட்ட பணிகளை கலெக்டர் ஆய்வு**



தேனி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தும் திட்ட பணிகளை கலெக்டர் வெங்கடாசலம் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

<u>கலெக்டர் ஆய்வு</u>

தேனி மாவட்டம் குச்சனூர், ஆனைமலையான்பட்டி, நாகையகவுண்டன்பட்டி, கம்பம், சீலையம்பட்டி ஆகிய பகுதிகளில் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தும் திட்டப்பணிகள் குறித்து கலெக்டர் வெங்கடாசலம் ஆய்வு செய்தார். அப்போது குச்சனூர் பகுதியில் பாசிப்பயிறு சாகுபடியையும், ஆனைமலையான்பட்டியில் ஒருங்கிணைந்த பண்ணைய செயல்விளக்க திடலையும் அவர் பார்வையிட்டார்.

பின்னர் நாகையகவுண்டன்பட்டியில் நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் நிலத்தடி நீரை பெருக்குதல், மண்வளத்தை பாதுகாத்தல், தரிசு நிலங்களை விவசாய சாகுபடி நிலங்களாக மாற்றுதல் குறித்து செயல்படுத்தும் திட்டங்களையும், கம்பத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன குளிர்பதன கிட்டங்கியின் செயல்பாடுகள் குறித்தும், சீலையம்பட்டியில் சூரிய ஒளி சக்தி மூலம் இயங்கும் மின்மோட்டார் பம்புகள் பாசன வசதி குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பண்ணைய திடல்

அப்போது அவர் கூறியதாவது:–

மேற்குதொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் விவசாயம் சார்ந்த தொழில்களை செய்வதற்கு ஒருங்கிணைந்த பண்ணைய திடல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் விவசாயிகளுக்கு ரூ.20 ஆயிரம் மதிப்பில் 2 கறவை மாடுகளும், ரூ.25 ஆயிரம் மதிப்பில் 11 செம்மறி ஆடுகளும், ரூ.5 ஆயிரம் மதிப்பில் 30 நாட்டுக்கோழிகளும், மண்புழு உரக்குழி அமைக்க ரூ.10 ஆயிரமும், பண்ணைக்குட்டைகள் அமைக்க ரூ.20 ஆயிரமும் தெளிப்புநீர் பாசனக்கருவி அமைக்க ரூ.20 ஆயிரமும் என மொத்தம் ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் செலவிடப்படுகிறது. இதில் 90 சதவீதம் மானியமாக ரூ.99 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

திராட்சை மற்றும் திசுவாழை சாகுபடி தவிர இதர பழப்பயிர்களான கொய்யா அடர் நடவுக்கு ரூ.17 ஆயிரத்து 592–ம், பப்பாளி அடர் நடவுக்கு ரூ.23 ஆயிரத்து 100–ம் மா சாதாரண நடவுக்கு ரூ.7 ஆயிரத்து 650–ம், எலுமிச்சை நடவுக்கு ரூ.12 ஆயிரமும், மா அடர் நடவுக்கு ரூ.9 ஆயிரத்து மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சின்ராஜ் மற்றும் அரசு அதிகாரிகள் உள்பட பலர் உடன் இருந்தனர்.

**குறுவை சாகுபடிக்கு தட்டுப்பாடின்றி உரம் வினியோகம் அதிகாரி தகவல்**




குறுவை சாகுபடிக்கு தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு இருப்பதாக வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக் குனர் ராஜேந்திரன் கூறி னார். குறுவை சாகுபடி திருவாரூர் மாவட்டத்தில் கோடை சாகுபடி பணிகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. பல இடங்களில் குறுவை சாகுபடி பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. குறுவை சாகுபடிக்கு தேவையான அளவு உரம் வரவழைக்கப்பட்டு, விவ சாயிகளுக்கு வினியோகம் செய்யும் பணியும் நடந்து வருகிறது. வெளி மாநிலங்களில் இருந்து வரவழைக்கப்படும் உரம் திருவாரூரில் உள்ள தஞ்சை கூட்டுறவு விற்பனை இணைய குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டு உள் ளது. இருப்பு வைக்கப்பட்டு உள்ள உரத்தின் தரம், எடை அளவு குறித்து வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்கு னர் ராஜேந்திரன் ஆய்வு செய்தார்.

ஆய்வு

அப்போது அவர் உர மூட்டைகளை தராசில் வைத்து சரியான எடை இருக்கிறதா? என்று பார்த்தார். இதை தொடர்ந்து உர மூட்டை களை தவிடு பரப்பி அதன் மீது அடுக்கி வைக்கும்படியும், சரி யான அளவில்

தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு உரம் வினி யோகம் செய்யவும் அதிகாரி களுக்கு அறிவுறுத்தினார். ஆய்வுக்கு பின்னர் வேளாண்மை தரக்கட்டுபாடு உதவி இயக்குனர் ராஜேந்திரன் நிருபர்களுக்கு பேட்டி அளித் தார். அப்போது அவர் கூறியதா வது:- உரம் இருப்பு திருவாரூர் மாவட்டத்தில் கோடை சாகுபடி மற்றும் முன்பட்ட குறுவை சாகு படிக்கு தேவையான அளவு உரம் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு தட்டுப் பாடின்றி வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இதன்படி திரு வாரூரில் உள்ள தஞ்சை கூட்டுறவு விற்பனை இணைய குடோன்களில் யூரியா, டி.ஏ.பி. உள்ளிட்ட உரங்கள் 1837 டன் இருப்பு வைக்கப்பட்டுள் ளது. இதேபோல் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் குடோனில் 589 டன் யூரியா, 967 டன் டி.ஏ.பி., 429 டன் எம்.ஓ.பி., 61 டன் காம்ப்ளக்ஸ் உரம் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. மாவட்டம் முழு வதும் 3891 டன் உரம் கையி ருப்பு உள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு உரம் தட்டுப்பாடின்றி வினியோகம் செய்யப்படும். இவ்வாறு அவர் கூறி னார். ஆய்வின்போது கூட்டுறவு சங்க துணை பதிவாளர் நடராஜன், தஞ்சை கூட்டுறவு விற்பனை இணைய இணை செயலாளர் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை தரக்கட்டுபாடு அலுவலர் உதயகுமார், வட் டார வேளாண்மை அலுவலர் செந்தில், உர நிறுவன பிரதிநிதிகள் ஜெயபிரகாஷ், பொம் மண்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**விவசாயிகள் நவீன கருவிகளின் பயன்பாட்டை தெரிந்து பயன்படுத்த வேண்டும் கலெக்டர் பேச்சு**



விவசாயிகள் நவீன கருவிகளின் பயன்பாட்டை தெரிந்து பயன்படுத்த வேண்டும் என்று கலெக்டர் வீரராகவராவ் பேசினார்.

<u>குறை தீர்க்கும் நாள் கூட்டம்</u>

திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் கொ.வீரராகவராவ் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் வேளாண்மை, என்ஜினீயரிங் துறையினரால் வேளாண் எந்திரங்கள் எந்திரமயமாக்கல், மேம்படுத்துதல் வேளாண் எந்திரங்களின் பயன்பாடு மற்றும் அதனை செயல்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு குறுந்தகடுகள் மூலம் எடுத்து கூறப்பட்டது.

அப்போது கலெக்டர் வீரராகவராவ் கூறியதாவது:–

திருவள்ளூர் மாவட்டத்தில் அதிக அளவில் குழாய் கிணறுகள் மூலம் சாகுபடி பணிகள் நடைபெற்று வருவதால் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்க வேண்டி நீர் சேகரிப்பு வழிமுறைகளை செயலாக்க பண்ணைக்குட்டைகள் அமைத்து மழைநீரை சேகரிக்க வேண்டும்.

<u>நவீன கருவிகள்</u>

விவசாயிகள் நவீன கருவிகளின் பயன்பாட்டை தெரிந்து பயன்படுத்த வேண்டும். மேலும் கடந்த 3 ஆண்டுகளில் செம்மை நெல்சாகுபடி பரப்பளவு 32 சதவீதத்தில் இருந்து 75 சதவீதமாக உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் நெற்பயிர் நடவின் போது வேளாண்மைத்துறை களப்பணியாளர்கள் கூடுதலாக களப்பணிகள் மேற்கொண்டு உற்பத்தியை பெருக்கிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த மாதத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது. பின்னர் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மற்றும் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் சத்துமிகு சிறுதானியங்கள் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த கையேடுகளையும் கலெக்டர் விவசாயிகளுக்கு வழங்கினார். இந்த கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) பாபு, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்பிரமணியன் மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி: திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 29ம் தேதி காலை 10.30 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் பழனிசாமி தலைமை வகிக்கிறார். விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு நீர்பாசனம், வேளாண்மை, இடுபொருட்கள், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவி, விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் மற்றும் வேளாண்மை தொடர்புடைய

கடனுதவி குறித்து நேரிலோ மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். இவ்வாறு கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

வீரிய ஒட்டுரக மக்காச் சோளம் சாகுபடி செய்தால் அதிக மகசூல்

சேதுபாவாசத்திரம்: குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும் வீரிய ஒட்டுரக மக்கா சோளத்தை சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம் என்று சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மக்கா சோளம் கால்நடை தீவனமாகவும், சமையல் எண்ணெய் எடுப்பதற்காகவும் பயன்படுவதோடு தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மக்காச்சோளம், மைதா, சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ- 1, கே- 1, கங்கா- 5, கே.எச் -1,2,3, கோ.எச்.எம் -5, எம் -900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே -6240, பயனீர்- 30 வி- 62, பயனீர்- 30 வி - 92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும். ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசன நோயை தடுக்க 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்யவேண்டும். 1 ஏக்கருக்கு 500கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடி(அரிசி)கஞ்சியில் கலந்து அதனுடன் பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உளர்த்தி பின்பு 60க்கு 20 செ.மீ. இடைவெளியில் அதாவது பாருக்கு பார் 60 செ.மீ செடிக்கு செடி 20 செ.மீ இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும் ஒரு ச.மீ 8 செடிகளும் ஒரு ஏக்கரில் 32240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவேண்டும். விதைப்புக்கு முன் 1 ஏக்கருக்கு 5 டன் தொழு உரம்

அல்லது தென்னை நார் கழிவு உரமிடவேண்டும். அத்துடன் நடவு வயலில் 1 ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும் போது களைக்கொல்லியான அட்ரசின் 50 சதம் நனையும் தூள் 200 கிராம் அல்லது ஆலாகுளோ 1.6 லிட்டர் / ஏக்கர் என்ற அளவில் 360 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான மூலம் தெளிக்கவேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தால் 1 ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ. 45,000 வரை வருமானம் பெறலாம் என்றார்.

நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை வேளாண்துறை ஆலோசனை

பழநி, : நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து வேளாண்துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக விளங்குகின்றன. தமிழகத்தில் 5.02 லட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய்வி த்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும். இதன் விளைச்சல் எக்டேருக்கு 2.15 டன்னாக உள்ளது. தமிழகத்தில் நிலக்கடலை மானாவாரியில் ஏப்ரல்மே, ஜுன்ஜுலை, ஜுலைஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. நிலக்கடலை பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண் துறையினரிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம்.

அதுபோல் பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டி மீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டி மீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும். எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 எக்டேருக்கு சூடோமோனாஸ் ஃபுளுரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது. இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**பழங்களை சேமித்து வைக்க குளிர்பதன சேமிப்பு கிடங்கு அமைக்கப்படுமா?**

பழநி, : பழநி அருகே ஆயக்குடியில் பழங்களை சேமித்து வைக்க குளிர்பதன சேமிப்பு கிடங்கு அமைக்க வேண்டுமென மூப்பனார் தேசிய பேரவை சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.பழநி ரயிலடி சாலையில் உள்ள மூப்பனார் தேசிய பேரவை அலுவலகத்தில் செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் பன்னிருகைசெல்வன் தலைமை வகித்தார். வாசன் பாசறை மாவட்ட தலைவர் மணிக்கண்ணன், காமராசர் தேசிய பேரவை தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழகத்தில் அதிகளவில் கொய்யா விளையும் பகுதியான

ஆயக்குடியில் பகுதியில் பழங்களை சேமித்து வைக்க குளிர்பதன சேமிப்பு கிடங்கு அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். யானைகளின் அட்டகாசத்தை தடுக்க அகழி அமைக்க வேண்டும்.அதிகரிக்கும் மணல் திருட்டை தடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் கவுன்சிலர்கள் பத்மினி முருகானந்தம், சுரேஷ், சுந்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் சுந்தரராசன் நன்றி கூறினார்.

ஆடு வளர்ப்பிலும் 'அடுக்குமுறை' அமல் குறைவான நிலம் உள்ளவர்களும் லாபம் பெற நவீன யுக்தி பயிற்சி முகாமில் விளக்கம்
திண்டுக்கல், : மேய்ச்சல் நிலம் இல்லாதவர்களும், குறைவான இடம் உள்ளவர்களும் பரண்மேல் ஆடுகளை வளர்த்து அதிக லாபம் பெறலாம் என்று பயிற்சி முகாமில் கால்நடைப் பல்கலைக்கழக பேராசிரியர் பீர்முகமது செயல்முறை விளக்கம் அளித்துப் பேசினார்.கிராமப்புரத்தில் உள்ள சுய உதவிக்குழுவினர் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெரும் நோக்கோடு ஆடு வளர்ப்பிற்காக நபார்டு நிதி உதவி வழங்கி வருகிறது. இதன் மூலம் ஆடு வளர்ப்பில் சிறப்பாக செயல்படும் பண்ணைகளைப் பார்வையிட்டு பல்வேறு விளக்கங்கள் அவர்களுக்கு அளிக்கப்படும். மேலும் கால்நடைத்துறை நிபுணர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயிற்சிகளை அளிப்பர்.இதன்படி கன்னிமானூத்து கிராமத்தில் சுயஉதவி குழுவினர்க்கான சிறப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது. கால்நடை பாதுகாப்பு அறக்கட்டளைத் தலைவர் ராமகிருஷ்ணன் வரவேற்றார்.

கால்நடைப் பல்கலைக்கழக பேராசிரியர் பீர்முகமது, டாக்டர் விஜயகுமார் ஆகியோர் பேசியதாவது: ஆடு வளர்ப்பு கிராமங்களில் லாபகரமான தொழிலாக மேற்கொள்ளலாம். இறைச்சிக்கான கிடாகுட்டியை 60 நாளில் வாங்கி 150 நாளில் விற்பனை செய்வதின் மூலம் குறுகிய கால லாபத்தை ஈட்டலாம். இதற்காக 45 நாட்களுக்கு ஒரு முறை குடற்புழு நீக்கம் செய்வதுடன் தினமும் 80 முதல் 120 கிராம்

அளவிற்கு மக்காச்சோளம், புண்ணாக்கு அடங்கிய சரிவிகித கலப்பு தீவனத்தை அளிக்க வேண்டும். இதேபோல் மேய்ச்சல் நிலம் இல்லாதவர்கள் பரண்மேல் ஆடு வளர்ப்பை மேற்கொள்ளலாம். இதற்கு தினமும் இரண்டரை முதல் 3 கிலோ தீவனம் போதுமானது. தீவனத்தை சிறியதாக வெட்டி வைப்பதின் மூலம் தீவன செலவைக் குறைக்கலாம். முறையான பராமரிப்பை மேற்கொண்டால் ஆடு வளர்ப்பில் பெரியஅளவில் லாபம் ஈட்டலாம் என்றனர்.சில்வார்பட்டி சிண்டிகேட் வங்கி மேலாளர் அய்யனார் ஆடுகளுக்கு கடன் பெறும் வழிமுறைகள் குறித்தும் கால்நடை முதுநிலை மேலாளர்(ஓய்வு) மோகன்ராம் நோய்தடுப்பு முறை குறித்தும் பேசினர்.

**விவசாய நிலங்களுக்கான பாதை ஆக்கிரமிப்பு**

சிவகங்கை, : கல்லல் அருகே கூமாச்சிபட்டியில் விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதை தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக கலெக்டரிடம் கிராமத்தினர் புகார் மனு அளித்தனர். இதுகுறித்து அவர்கள் மனுவில் கூறியிருப்பதாவது: சிவகங்கை மாவட்டம் கல்லம் அருகே உள்ள கூமாச்சிபட்டியில் விவசாயமே வாழ்வாதாரம் ஆகும். இங்கு விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதையை தனியார் ஆக்கிரமித்துள்ளனர். இதுகுறித்து ஏற்கனவே மனு அளிக்கப்பட்டு, ஆர்டிஓ, தாசில்தார் தலைமையில் கூட்டம் நடந்தது. இதில் ஆக்கிரமிப்பாளர்கள் பாதை தர மறுத்துவிட்டு நிலையில் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், நிலங்களுக்கு செல்ல முடியாமல் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படுகிறது. பாதை கிடைத்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும். நிலங்களுக்கு டிராக்டர் மற்றும் விவசாய இயந்திரங்கள் செல்ல பாதை கட்டாயம் தேவை. எனவே, பாதை ஏற்படுத்திதர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**காவிரி பாசன வெற்றிலைக்கு வெளிமாநிலங்களில் வரவேற்பு**

கரூர்: கரூர் வட்டாரத்தில் புகழூர், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், பாலத்துறை உள்ளிட்ட காவிரி பாசன பகுதிகளில் வெற்றிலை சாகுபடி ஆயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முன்பு நிலத்திற்கு சொந்தக்காரர்களே சாகுபடி செய்துவந்தனர். காலப்போக்கில் நிலத்தை குத்தகைக்கு விட தொடங்கியுஙள்ளனர். வெற்றி கொடிக்கால்களுக்கு காவிரியாற்று நீ,ர் பாசன ஆதாரமாக உள்ளது. புகழூர் பகுதி மற்றும் கரூர் வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் விளையும் வெற்றிலைகள் வேலாயுதம்பாளையம் வெற்றிலை மண்டிக்கும், வேலுரில் உள்ள தினசரி வெற்றிலை ஏல மார்க்கெட்டிற்கும் விற்பனைக்காக அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. வெற்றிலை மண்டிகளுக்கு திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர், மோகனூர், பரமத்தி போன்ற நாமக்கல் மாவட்ட விவசாயிகளும் விற்பனைக்காக வெற்றிலை கொண்டு வருகின்றனர். இங்கு நடைபெறுகின்ற வெற்றிலை ஏலத்தில் கலந்துகொள்வதற்காக கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை போன்ற ஊர்களில் இருந்து மொத்த வியாபாரிகள் வந்து வெற்றிலை ஏலம் எடுக்கின்றனர். லாரிகள் மற்றும் ரயில்கள் மூலம் மேற்கண்ட ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேலும் கர்நாடகா, ஆந்திரா, கேரளா உபி, மராட்டியம், உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் வெற்றிலை அனுப்பப்படுகிறது. வறட்சி காரணமாக வெற்றிலை விளைச்சல் குறைந்திருந்த நிலை காவிரியில் நீர்வரத்து காரணமாக நிலைமாறியுள்ளது. தற்போது பெய்த மழையால் வெயில் கொடுமையில் இருந்து வெற்றிலை பயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. காவிரியாற்றுப்பாசனத்தில் இக்கரையில் உள்ள கரூர் மாவட்ட கிராமத்தினர் அக்கரையில் உள்ள நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வெற்றிலை சந்தையில் வெற்றிலை விற்பனை செய்கின்றனர். வெற்றிலை பயிர் சாகுபடி செய்வதற்கு வேளாண்துறையினர் உரிய ஆலோசனைகளை வழங்கி. மானியம் அளிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. சேரன் மெட்ரிக் பள்ளி மாணவிகளுக்கு பாராட்டு கரூர்: 10ம் வகுப்பு

பொதுத் தேர்வில் மாநில அளவில் 2 மற்றும் 3ம் இடங்களை பெற்ற கரூர் வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகளை கலெக்டர் பாராட்டினார்.

10ம்வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி வேதவர்ஷனி 498 மார்க் பெற்று 2ம்இடம் பெற்றார். 497 மார்க் பெற்று 3ம்இடத்தில், தாரணி, காவியா, பவித்ரா, பிரியதர்ஷினி, விஸ்வபாரதி ஆகியோர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்ற மாணவிகளை கரூர் கலெக்டர் ஜெயந்தி பாராட்டி பரிசு வழங்கினார். மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருவளர் செல்வி, மாவட்ட கல்வி அலுவலர் ராஜேந்திரன், பள்ளி ஆலோசகர் செல்வதுரை, தாளாளர் பாண்டியன், முதல்வர் பழனியப்பன் ஆகியோர் பாராட்டினர். சேரன் பள்ளி மாணவர்கள் 561 பேர் தேர்வெழுதி அனைவரும் 100 சதவீத தேர்ச்சி பெற்றனர். ஒவ்வொரு வருடமும் மாநில, மாவட்ட அளவிலான இடங்களை இப்பள்ளி பிடித்து வருகிறது. மேலும் ஆங்கிலம் 2 பேர், கணிதம் 57 பேர், அறிவியல் 270 பேர், சமூக அறிவியல் 165 பேர், என 494 பேர் 100க்கு 100 மார்க் பெற்று தேர்ச்சி பெற்றனர். 72 பேர் 490க்கு மேலும், 187 பேர் 480க்கு மேலும், 270 பேர் 470க்கு மேலும், 325 பேர் 460க்கு மேலும், 374 பேர் 450க்கு மேலும் மார்க் பெற்று சாதனை படைத்துள்ளனர் என பள்ளி முதல்வர் தெரிவித்தார்.

கரூர்: கரூர் வட்டாரத்தில் புகழூர், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், பாலத்துறை உள்ளிட்ட காவிரி பாசன பகுதிகளில் வெற்றிலை சாகுபடி ஆயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முன்பு நிலத்திற்கு சொந்தக்காரர்களே சாகுபடி செய்துவந்தனர். காலப்போக்கில் நிலத்தை குத்தகைக்கு விட தொடங்கியுஙள்ளனர். வெற்றி கொடிக்கால்களுக்கு காவிரியாற்று நீ,ர் பாசன ஆதாரமாக உள்ளது. புகழூர் பகுதி மற்றும் கரூர் வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில்

விளையும் வெற்றிலைகள் வேலாயுதம்பாளையம் வெற்றிலை மண்டிக்கும், வேலுரில் உள்ள தினசரி வெற்றிலை ஏல மார்க்கெட்டிற்கும் விற்பனைக்காக அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. வெற்றிலை மண்டிகளுக்கு திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர், மோகனுார், பரமத்தி போன்ற நாமக்கல் மாவட்ட விவசாயிகளும் விற்பனைக்காக வெற்றிலை கொண்டு வருகின்றனர். இங்கு நடைபெறுகின்ற வெற்றிலை ஏலத்தில் கலந்துகொள்வதற்காக கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை போன்ற ஊர்களில் இருந்து மொத்த வியாபாரிகள் வந்து வெற்றிலை ஏலம் எடுக்கின்றனர். லாரிகள் மற்றும் ரயில்கள் மூலம் மேற்கண்ட ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேலும் கர்நாடகா, ஆந்திரா, கேரளா உபி, மராட்டியம், உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் வெற்றிலை அனுப்பப்படுகிறது. வறட்சி காரணமாக வெற்றிலை விளைச்சல் குறைந்திருந்த நிலை காவிரியில் நீர்வரத்து காரணமாக நிலைமாறியுள்ளது. தற்போது பெய்த மழையால் வெயில் கொடுமையில் இருந்து வெற்றிலை பயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. காவிரியாற்றுப்பாசனத்தில் இக்கரையில் உள்ள கரூர் மாவட்ட கிராமத்தினர் அக்கரையில் உள்ள நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வெற்றிலை சந்தையில் வெற்றிலை விற்பனை செய்கின்றனர். வெற்றிலை பயிர் சாகுபடி செய்வதற்கு வேளாண்துறையினர் உரிய ஆலோசனைகளை வழங்கி. மானியம் அளிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. சேரன் மெட்ரிக் பள்ளி மாணவிகளுக்கு பாராட்டு கரூர்: 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் 2 மற்றும் 3ம் இடங்களை பெற்ற கரூர் வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகளை கலெக்டர் பாராட்டினார்.

10ம்வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் வெண்ணைமலை சேரன்

மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி வேதவர்ஷனி 498 மார்க் பெற்று 2ம்இடம் பெற்றார். 497 மார்க் பெற்று 3ம்இடத்தில், தாரணி, காவியா, பவித்ரா, பிரியதர்ஷினி, விஸ்வபாரதி ஆகியோர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்ற மாணவிகளை கரூர் கலெக்டர் ஜெயந்தி பாராட்டி பரிசு வழங்கினார். மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருவளர் செல்வி, மாவட்ட கல்வி அலுவலர் ராஜேந்திரன், பள்ளி ஆலோசகர் செல்வதுரை, தாளாளர் பாண்டியன், முதல்வர் பழனியப்பன் ஆகியோர் பாராட்டினர். சேரன் பள்ளி மாணவர்கள் 561 பேர் தேர்வெழுதி அனைவரும் 100 சதவீத தேர்ச்சி பெற்றனர். ஒவ்வொரு வருடமும் மாநில, மாவட்ட அளவிலான இடங்களை இப்பள்ளி பிடித்து வருகிறது. மேலும் ஆங்கிலம் 2 பேர், கணிதம் 57 பேர், அறிவியல் 270 பேர், சமூக அறிவியல் 165 பேர், என 494 பேர் 100க்கு 100 மார்க் பெற்று தேர்ச்சி பெற்றனர். 72 பேர் 490க்கு மேலும், 187 பேர் 480க்கு மேலும், 270 பேர் 470க்கு மேலும், 325 பேர் 460க்கு மேலும், 374 பேர் 450க்கு மேலும் மார்க் பெற்று சாதனை படைத்துள்ளனர் என பள்ளி முதல்வர் தெரிவித்தார்.

**திருக்கடையூரில் விவசாயிகளுக்கு இலவசமாக மண்மாதிரி பரிசோதனை**

தரங்கம்பாடி: விவசாயிகளுக்கு மண்மாதிரி பரிசோதனை இலவசமாக செய்யபடுவதாக வேளாண் உயர் அதிகாரி தெரிவித்தார். திருக்கடையூரில் உள்ள அரசு விதைப் பண்ணையை வேளாண் கூடுதல் இயக்குனர் ஹாஜகான் ஆய்வு செய்தார். அப்போது குறுவை சாகுபடிக்கு தேவையான சான்று விதைகள் இருப்பு உள்ளதா? என்பதையும் ஆய்வு செய்தார். மேலும் காலகஸ்திநாதபுரம் வயலில் நடமாடும் மண்வள அட்டை இயக்கத்தின் சார்பில் மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலகத்தில் பன்னீர் செல்வம், சுகன்யா முன்னிலையில் மண்மாதிரி சேகரிப்பு பணி நடைபெறுவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் விவசாயிகள் மண்மாதிரி சேகரிப்பது குறித்தும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். மேலும்,

இம்மண்மாதிரி சேகரிப்பு பணியில் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொள்ள வேண்டும் என்றும், இம்மண்மாதிரி பரிசோதனை இலவசமாக விவசாயிகளுக்கு செய்யய்படுவதாகவும், இப்பணி 3 ஆண்டுகள் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

அவருடன் நாகை வேளாண் இணை இயக்குனர் (பொ) கணேசன், வேளாண் துணை இயக்குனர் விஜயகுமார், செம்பனார்கோவில் வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன், தலைஞாயிறு வேளாண் உதவி இயக்குனர் சந்திரகாசன், வேளாண் அலுவலர் கனகம், சங்கரநாராயணன், அரசு விதைப் பண்ணை வேளாண் அலுவலர் முருகராஜ், துணை வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன் உதவி வேளாண் அலுவலர்கள் சந்திரசேகரன், ரவிச்சந்திரன், உதயசூரியன், பிரபாகரன் அட்மா திட்ட மேலாளர் திருமுருகன் உதவி மேலாளர் பார்த்திபன் சுகன்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காலிங்கராயன் வாய்க்கால் பாசனப்பகுதியில் நெல் அறுவடை தீவிரம்

ஈரோடு, : காலிங்கராயன் வாய்க்கால் பாசனப்பகுதிகளில் கடந்த ஆண்டு திறக்கப்பட்ட தண்ணீரை கொண்டு சுமார் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பில் குறுவை, சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இரு சீசனிலும் நன்கு விளைந்த நெற்கதிர்கள் முறையாக அறுவடை செய்யப்பட்டது. ஓரளவு கட்டுபடியான விலையும் விவசாயிகளுக்கு கிடைத்ததால் நெல் சாகுபடியால் விவசாயிகள் பலன் அடைந்தனர். இதன் தொடர்ச்சியாக நவரை சீசன் எனப்படும் இரண்டாம் போக நெல் சாகுபடியை கடந்த ஜனவரி மாதம் துவங்கினர். பொதுவாக நவரை சீசனில் நெல் சாகுபடி குறைந்த பரப்பளவிலேயே நடைபெறும். இந்த சீசனில் சாகுபடி செய்யும் நெற்பயிர்கள் 90 முதல் 110 நாட்களில் அறுவடைக்கு வந்து விடும். அதன்படி ஜனவரியில் நாற்று நடப்பட்ட நெற்கதிர்கள் நன்கு விளைந்து முற்றியுள்ளது. இந்நிலையில் இம்மாத துவக்கத்தில் திடீரென கோடை

மழை பெய்ததால் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் விளைந்த நெற்கதிர்கள் தலை சாய்ந்ததுடன், நெல்மணிகளும் கொட்டியது. இதனால் கவலையடைந்த விவசாயிகள் மீண்டும் மழை தொடராமல் இருந்தால் மட்டுமே நெல் மணிகளை அறுவடை செய்ய இயலும் என்ற நிலை இருந்தது.

இதற்கிடையே கோடைமழையும் நின்று விட்டதால் நெல் அறுவடை பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகள் கூறுகையில், கடந்த 4 ஆண்டுகளாக காலிங்ராயன் பாசனப்பகுதியில் நவரை சீசனில் நெல் சாகுபடிப்பணிகள் நடைபெறவில்லை. 4 ஆண்டுக்கு பிறகு இப்போது தான் நவரை சீசனில் நெல் சாகுபடி செய்து அவற்றை அறுவடை செய்யும் பணிகள் நடக்கிறது. இட்லி குண்டு ரகம், ஐ.ஆர்.20, அதிசயபொன்னி நெல் ரகங்களை பெரும்பாலான விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். விளைச்சல் ஓரளவு எதிர்பார்த்தபடியே உள்ளது. இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.